

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் அன்னம்புத்தூர் நரசிம்மர் ஓடையில் ரூ5.51 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய சேர்மன் தயாளன், துணைசேர்மன் பழனி, மாவட்ட ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் ராஜா,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட நிர்வாகிகள் உள்ளனர்.

### மரக்காணம் ஒன்றியம் - அன்னம்புத்தூர் நரசிம்மர் ஓடையில்

# ரூ.5.51 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், ஏப்.5-

மரக்காணம் மேற்கு ஒன்றியம் அன்னம்புத்தூர் நரசிம்மர் ஓடையில் ரூ5.51 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் அமைக்க முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் அன்னம்புத்தூரில் இருந்து ஓமந்தூர் செல்லும் வழியில் நரசிம்மர் ஓடை உள்ளது.

இந்த ஓடையில் உயர் மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையினை ஏற்று நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 5. 51 கோடி மதிப்பீட்டில் உயர் மட்ட பாலம் அமைப்ப தற்கான அடிக்கல் நாட்டு விழா அன்னம்புத்தூர் நரசிம்மர் ஓடை அருகில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் பழனி, ஒன்றிய கவுன்சிலர் அமுதா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் புனித வள்ளி ரவி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு ரூபாய் 5.51 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,

மாவட்ட ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் ராஜா,உதவி செயற்பொறியாளர் அன்புராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் சிவனேசன், உதவி பொறியாளர்கள் செல்வம், விஜயலட்மி, ஒன்றிய கவுன்சிலர்கள் நாகஜோதி கணேசன், அம்புஜம் சுகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணிஅமைப்பாளர் திருமலை, ஒன்றிய நிர்வாகிகள் மீனா குமாரி, பாபு, தேவா, கிருஷ்ணமூர்த்தி, ஐ. கே .எஸ். ஆறுமுகம், பாலசுந்தரம், சங்கர்,கணேஷ், ஓமந்தூர் முருகன், தமிழ், துணை தலைவர் சம்பத், மணிகண்டன், திண்டிவனம் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சங்கர், எழில்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் செல்லக்கண்ணு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அரங்கநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### கொடைக்கானலில் கடும் போக்குவரத்து நெருக்கடி:

# மாற்றுப் பாதை எப்போது அமைக்கப்படும்?

### பேரவையில் ஐ.பி.செந்தில்குமார் கேள்வி!



சென்னை, ஏப்.7-

கொடைக்கானலில் கடும் போக்குவரத்து நெருசலைப் போக்க மாற்றுப்பாதை எப்போது அமைக்கப்படும் என்று பேரவையில் ஐ.பி.செந்தில் குமார் வினா எழுப்பினார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

**ஐ.பி. செந்தில்குமார்:** நம்முடைய தமிழ்நாட்டினுடைய சர்வதேச அடையாளமாக இருக்கக்கூடிய கொடைக்கானல், மிகவும் கடும் போக்குவரத்து நெருக்கடியில் இருக்கிறது. குறிப்பாக, வார நாட்களில் கிட்டத்தட்ட 34 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று வழிப் பாதை அங்கே உருவாக்குவதற்கு ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணி என்ன நிலையில் இருக்கிறது?

**அமைச்சர் எ.வ.வேலு:** நம்முடைய உறுப்பினர் தம்பி செந்தில்குமார் அவர்கள் குறிப்பிடுவதைப் போல, இந்தியாவில் இருக்கிறவர்களெல்லாம், தமிழ்நாடு மாத்திரம் அல்ல, இந்தியாவில் இருக்கின்ற சுற்றுலாப் பயணிகள்கூட கொடைக்கானலுக்கு வருகிறார்கள். அதனால் SEASON ல் பார்த்தீர்களென்றால், வண்டிகள் உள்ளே செல்வதற்கு பலமணி நேரம் ஆகிறது. ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில் பல நேரங்களில் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதிலும், உறுப்பினர் செந்தில்குமார் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் இதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதற்காக,

நானே நேரடியாக அவரை அழைத்து கொண்டு, கொடைக்கானலுக்குச் சென்று, மற்றொரு மாற்றுப் பாதை அமைப்பதற்கு வேண்டிய பணிகளை ஆய்வு செய்வதற்காக நான் சென்றிருந்தேன். அதற்குபின்னர் தற்போது நம்முடைய அரசாங்கத்தின்மூலமாக பொறியாளர்களை அழைத்து, இந்த ஆண்டே அதுகுறித்து விரிவான திட்ட அறிக்கை தேவையென்று தெரிவித்து, அதற்கு முக்கியத்துவம் தந்து, தற்போது அப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது முழுமையடைந்தவுடனே முதல மைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று, எவ்வளவு ரூபாய் தேவைப்படுமோ, அதற்கு இசைவு பெற்று, அதற்கு இந்த ஆண்டே முக்கியத்து வம் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.






## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### சட்டப்பேரவையில் அறிவிப்பு: ரூ.5 கோடியில் ரிஷிவந்தியம் தொகுதி

# வாணாபுரம் தாலுகா புதிய அலுவலக கட்டிடம் கட்டப்படும்!

### அரசுக்கு வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நன்றி!



ரிஷிவந்தியம், ஏப்.8-

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதியில், வாணாபுரம் தாலுகா புதிய அலுவலக கட்டிடம் கட்ட ரூ.5 கோடியில் நிதி ஒதுக்கீடு செய்து சட்டப் பேரவையில் அறிவிக்கப் பட்டுள்ளது என வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.


ரிஷிவந்தியம் தொகுதி மக்களின் நீண்ட வருட கோரிக்கையான பல்வேறு வருவாய் கிராமங்களை உள்ளடக்கி வாணாபுரம் தனி தாலுகாவாக உருவாக்க தமிழக முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் கோரிக்கை வைத்தார். இதனைத் தொடர்ந்து 2022-23 ஆம் ஆண்டு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நடைபெற்ற வருவாய்த்துறை மானிய கோரிக்கையின் போது ரூ.7.5 கோடி மதிப்பில் வாணாபுரத்தில் புதிய தாலுகா தொடங்க உள்ளதாக சட்டமன்றத்தில் வருவாய்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிவித்தார்,

அதன் பின் வானாபுரத்தை தலைமை இடமாகக் கொண்டு புதிய தாலுகாவை 2023 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் துவக்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து வாணாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பகண்டை கூட்டு சாலையில் உள்ள வட்டார சேவை மைய அலுவலகத்தில் தற்காலிகமாக தாலுகா அலுவலகம் இயங்கி வந்தது அந்த அலுவலகத்தில் போதுமான இட வசதி இல்லாததால் பகண்டை கூட்டுச் சாலையில் உள்ள ஜான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் உள்ள போதிய இடவசதி உள்ள கட்டிடத்தை தேர்வு செய்து இந்த இரண்டு கட்டிடத்தையும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி அன்று திறந்து வைத்தார், தற்போது வரை அதே கட்டிடத்தில் இயங்கி வருகிறது, இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் வருவாய்த்துறை மானிய கோரிக்கை யில் புதிதாக உருவாக்கப்பட்ட வாணாபுரம் புதிய தாலுகா அலுவலக கட்டிடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என வருவாய்த் துறை அமைச்சர் அறிவித்துள்ளார் என வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்,

மேலும் நிதி ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூகநீதி காலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோருக்கு ரிஷிவந்தியம் தொகுதி மக்கள் சார்பாக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ.டி. வேலு
### ஏப்ரல் 8 (2016)



கழகத்தில் ஐம்பது ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்.

ஒன்றிய அவைத் தலைவர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் கழகப் பணியாற்றியவர்..

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக, மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா அருணாசலம்
### ஏப்ரல் 8 (1981)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது "எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்" என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.